இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார். குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் அவ்வன்பின் மூலம் இணைந்து உயிர் பெறச் செய்தார். நீங்கள் மீட்கப் பட்டிருப்பது அந்த அருளாலேயே. இயேசு கிறிஸ்துவோடு இணைந்த நிலையில் நாம் அவரோடு உயிர்த்தெழவும் விண்ணுலகில் அவரோடு அமரவும் செய்தார். கிறிஸ்து இயேசு வழியாகக் கடவுள் நமக்குச் செய்த நன்மையையும் அவரது ஒப்புயர்வற்ற அருள் வளத்தையும் இனி வரும் காலங்களிலும் எடுத்துக்காட்டுவதற்காகவே இவ்வாறு செய்தார். (எபே 2:4-7)

# 'அனைவரும் நம் உடன்பிறப்புக்கள்'

## ஈராக்கிற்கான திருத்தந்தையின் வெற்றி பயணம்

**வத்திக்கான்**: கடந்த வாரம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், **"நீங்கள் எல்லாரும் என் உடன்பிறப்புக்கள்"** என்ற உணர்வோடு, ஈராக் தலைநகர் பாக்தாத், நஜாஃப், ஈராக்கிய குர்திஸ்தான் தன்னாட்சிப் பகுதியின் மோசூல், ஊர், கரகோஷ், மற்றும், எர்பில் ஆகிய நகரங்களில், மூன்று நாள்கள், முழுவீச்சுடன் பயண நிகழ்வுகளை



*ஈராக்கின், ஷியா இஸ்லாம் பிரிவின் தலைவர் அயோத்தொலா அலி அல்-சிஸ்தானி அவர்களுடன் திருத்தந்தை பிரான்சிஸ்*

நிறைவேற்றினார். அனைவரும் நம் உடன்பிறப்புக்கள் என்ற உணர்வோடு, வாழ்வுப் பயணத்தைத் தொடரும் போதுதான், வேறுபாடுகளையும் கடந்து, ஒருவர் ஒருவரை, ஒரே மனிதக் குடும்பத்தின் உறுப்பினர்களாக நாம் பார்க்க முடியும். அதோடு, நாட்டின் மீள்கட்டமைப்புப் பாதையை பயனுள்ள மற்றும், உறுதியுள்ள முறையில் தொடர முடியும். இவ்வாறு வாழும் போதுதான், நாட்டின் வருங்காலத் தலைமுறைகளுக்கு, நீதியும், மனிதமும் நிறைந்த சிறந்ததோர் உலகை விட்டுச்செல்ல முடியும் என்று திருத்தந்தை கூறி, ஈராக்கியர்களை உற்சாகப்படுத்தினார். பல ஆண்டுகள் போர், பிரிவினைவாத வன்முறை, பயங்கரவாதம் போன்றவற்றால் கடுமையாய்த் துன்புற்றுள்ள ஈராக் மக்களுக்கு, குறிப்பாக, கத்தோலிக்கர், மற்றும், கிறிஸ்தவர்களுக்கு, ஆறுதலளித்து அவர்களைத் தேற்றினார். சகிப்புத்தன்மை, மனிதகுல உடன்பிறந்த உணர்வு, நம்பிக்கை, மற்றும், அமைதிக்கு அழைப்பு விடுத்தார்.

### ஈராக்கிய குர்திஸ்தான் பகுதியில் திருத்தந்தை

மார்ச் 07, ஞாயிறன்று, ஈராக்கிய குர்திஸ்தான் பகுதிக்குச் சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், IS எனும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பின் பயங்கரவாதக் கொடுமைகளை, தாங்கள் எதிர்கொண்ட முறை பற்றி, அந்த அமைப்பால் சிதைக்கப்பட்டுள்ள மோசூல் நகரின் கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் பகிர்ந்துகொண்டதற்குச் செவிமடுத்தார். அப்போது திருத்தந்தை, சகோதரத்துவ கொலைகளைவிட உடன்பிறந்த உணர்வே அதிகம் உறுதியானது. வெறுப்பைவிட நம்பிக்கை வலிமையுள்ளது. போரைவிட அமைதி சக்திபடைத்தது என்று கூறினார்.

மோசூல் நகரில் குண்டுகளால் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ள ஆலயங்கள், வீடுகள் மற்றும், கட்டடங்களைப் பார்த்து திருத்தந்தை மிகவும் உள்ளம் வருந்தினார். உலகின் மிகப் பழமையான கிறிஸ்தவ சமுதாயங்களில் ஒன்றான ஈராக் கிறிஸ்தவர்கள், பல ஆண்டுகளாகப் போர்களால் பாதிக்கப்பட்டவர்கள். இதனால் 2003-ம் ஆண்டில், ஈராக்கில் இடம்பெற்ற ஆமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆக்ரமிப்பிற்குமுன், ஏறத்தாழ 15 இலட்சமாக இருந்த அவர்களின் எண்ணிக்கை தற்போது ஏறத்தாழ மூன்று இலட்சமாகக் குறைந்துள்ளது.



### கரகோஷில் திருத்தந்தை

கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழ்ந்த கரகோஷ் நகரின் அமல மரி கத்தோலிக்க ஆலய வளாகத்தை, IS இஸ்லாமிய அமைப்பினர், துப்பாக்கிச்சூடு நடத்துவதற்குப் பயிற்சித்தளமாகப் பயன்படுத்தியுள்ளனர். எனவே இந்நகரின் கிறிஸ்தவ சமுதாயத்தை அந்த ஆலயத்தில் சந்தித்து அவர்களோடு செபித்து உரையாற்றிய திருத்தந்தை, மன்னிப்பு மற்றும், உடன்பிறந்த உணர்வில் தங்களின் சமுதாயங்களை அமைக்குமாறு கேட்டுக் கொண்டார். திருத்தந்தையின் ஈராக் திருத்தூதுப் பயணம், அந்நாட்டிற்கு மட்டுமல்ல, மத்திய கிழக்குப் பகுதி முழுவதற்கும், குறிப்பாக, சிரியாவிற்கு மிகவும் முக்கியத்துவம் பெற்றது. உலகளாவிய திருஅவையின் மேய்ப்பர், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, பிரிவினைவாதம் மற்றும், பயங்கரவாதத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள, மறைசாட்சியத்தை எதிர்கொண்டுள்ள தன் மந்தையைத் தேடிச் சென்றார். அவர்கள் மறக்கப்படவில்லை என்பதை, இந்த பயணத்தின் வழியாக அவர் உறுதி செய்துள்ளார். ஈராக்கில் அமைதி பற்றி போதித்த திருத்தந்தை, மன்னிப்பு மற்றும், உடன்பிறந்த உணர்வில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புங்கள் என அழைப்பு விடுத்தார்

-மேரி தெரேசா: வத்திக்கான்

# கிள்ளானில், குருத்துவ அருள்பொழிவு கொண்டாட்டம்

**கிள்ளான்**: இங்குள்ள புனித லூர்து அன்னை பங்கில், கடந்த பிப்ரவரி 27-ம் திகதி, திருத்தொண்டர் பொனவெஞ்சர் இராயப்பன் அவர்களின் குருத்துவ அருள்பொழிவு திருப்பலி கொண்டாட்டம் நடமாட்டக்கட்டுப்பாட்டின் நிபந்தனைகளுக்கு ஏற்ப, கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. ஓய்வுப்பெற்ற பேராயர் முஃர்ப்பி பாக்கியம் அவர்கள் உடனிருந்து அக்குருத்துவ அருள்பொழிவு கொண்டாட்டத்திற்குச் சிறப்புச் சேர்த்தார்.

காலை 10.30 மணிக்குத் தொடங்கிய இத்திருப்பலியின் இரண்டாவது நிகழ்வாக திருநிலைப்படுத்தும் திருச்சடங்கு இடம்பெற்றது. ஆண்டவர், சாமுவேலை அழைத்தபோது சாமுவேல் அதை ஏற்று ஆண்டவரே பேசும் அடியவன் கேட்கிறேன் என்று பதில் அளித்ததுபோல், திருத்தொண்டர் பொனவெஞ்சர் பேராயர் முன் வந்து நின்றார். பின்னர், வழக்கம்போல் இத்திருச்சடங்கில் இடம்பெறும் அழைப்பு விடுத்தல் - சோதித்தறிதல் - தேர்வு செய்தல் போன்ற அம்சங்களோடு, பேராயரின் அறிவுரை மறையுரையும் இடம்பெற்றது. அடுத்து, கீழ்ப்படிதல் வாக்குறுதி திருத்தொண்டரால் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து, புனிதர்களின் மன்றாட்டுமாலை அருள்தந்தை ஜெரார்ட் திரவியம் அவர்களால் பாடப்பட, அதனைத் தொடர்ந்து, அருள்தந்தை வின்சன் தோமஸ் அவர்களால் திருவுடை அணிவித்தல் சடங்கும் சிறப்பாக நிறைவேறியது. பின்னர், இக்கொண்டாட்டத்தின் கொடுமுடியான கைகளில் திருஎண்ணெய் பூசுதல் சடங்கின் வழியாக பேராயர் திருத்தொண்டரை அருள்பொழிவு செய்து அருள்பணியாளராக நியமனம் செய்தார்.

*(தொடர்ச்சி அடுத்தப் பக்கம்.....)*



**பேராயர் திருத்தொண்டர் பொனவெஞ்சர் உள்ளங்கைகளில் திருத்தைலம் பூசி அருள்பொழிவுச் செய்கிறார்**

# திருத்தொண்டர் அருள்பணியாளரானார்

*முதல் பக்கத் தொடர்ச்சி..*

திரு எண்ணெய் பூசுதல் சடங்கின் வழி குருத்துவத்தில் திருநிலைப்படுத்தும் சடங்குகள் அனைத்தும் நிறைவேறின. அருள்தந்தை பொனவெஞ்சர் இராயப்பன் தமது தந்தையிடமிருந்து இரசக் கிண்ணத்தையும் அப்பத்தட்டையும் பெருமகிழ்வோடுப் பெற்றுக்கொண்டு, தமது முதல் திருப்பலியைத் தொடர்ந் தார்.

பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் தமதுரையில் கோலாலம்பூர் மாமறை மாவட்டத்திற்கு மற்றுமொரு அருள்-தந்தையை அளித்த கடவுளுக்கும், அருள்தந்தை பொனவெஞ்சர் தந்தைக்கும், குடும்பத்தினருக்கும், விண்ணகத்திலிருந்து ஆசீர் வழங்கும் அவரது தாயாருக்கும் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் களுக்கும், கிள்ளான் வட்டார அருள்பணியாளர்களுக்கும், பங்கு மக்களுக்கும், குறிப்பாக பங்குத்தந்தை பெஃடரிக் ஜோசப் அவர்களுக்கும், ஏற்பாட்டுக்குழுவினருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டதோடு, அடுத்த அறிவிப்புவரை லூர்து அன்னை பங்கிலேயே பணி செய்ய அருள்தந்தை பொனவெஞ்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

நன்றியுரையாற்றிய அருள்தந்தை பொனவெஞ்சர், கடவுளுக்கும், அவரை உருவாக்கிய கல்லூரி விரிவுரையாளர் களுக்கும், குறிப்பாக அவரது தந்தைக்கும் தாயாருக்கும், உடன்பிறந்த சகோதர சகோதரிக்கும், பங்குத்தந்தைக்கும், பங்கு மக்களுக்கும் நன்றி மாலை சூட்டினார்.

இறுதியாக, குருத்துவ அருள்பொழிவு கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் K.ஜோன் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

*-k. ஜோன்*

# புடாபெஸ்ட் நகரில் 52-வது உலக திருநற்கருணை மாநாடு

**வத்திக்கான்:** வருகிற செப்டம்பர் மாதம் 5-ம் தேதி முதல் 12-ம் தேதி வரை, ஹங்கேரி நாட்டின் தலைநகர் புடாபெஸ்ட் நகரில் 52-வது உலக திருநற்கருணை மாநாடு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

வருகிற செப்டம்பர் 12ம் தேதி, ஹங்கேரி நாட்டுத் தலைநகரில் தியாகிகள் வளாகத்தில் நடைபெறும், 52-வது உலக திருநற்கருணை மாநாட்டின் நிறைவுத் திருப்பலியில் கலந்துகொள்ளப்போவதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் விருப்பம் குறித்து, ஹங்கேரி நாட்டு ஆயர் பேரவை, அதன் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளது.




# கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் புனித வாரத் திருவழிபாட்டுக்கான வழிகாட்டி

## பேராயர் அலுவலக அறிக்கை

கோலாலம்பூர்: மார்ச் 13-ஆம் திகதி தொடக்கம் ஆலயங்களிலும், சிற்றாலயங்-களிலும் பொது திருப்பலிகள் கொண்டாட பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் அனுமதி வழங்கியுள்ள வேளையில், திருவழிபாட்டு ஆணையம் புனித வார திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களுக்-கான வழிகாட்டியை வகுத்துள்ளது.

**1. புனித வாரத்தின் தூய மற்றும் பாதுகாப்பான கொண்டாட்டம்.**

திருவழிபாட்டு ஆணையம் தயாரித்துள்ள புனித வார வழிகாட்டியைப் பின்பற்றி அரத்தமுள்ள, பலன்தரும் வகையில் பங்குகளில் திருவழிபாட்டு நிகழ்வுகள் கொண்டாடப்பட வேண்டும்.

**2. புனித வார குடும்ப இறைவேண்டல் வழிபாடுகள்.**

ஆலயங்களில்/ சிற்றாலயங்களில் புனித வார திருவழிபாட்டு நிகழ்வுகளில் கலந்துகொள்ள இயலாதவர்களுக்கென்று, இல்லத்திலிருந்து பங்குபெற நான்கு மொழிகளிலும் வழிகாட்டி கையேடுகள் வழங்கப்படும். தொடர்ந்து இயங்கலை (online) வாயிலாக அனைத்து கொண்டாட்டங்களும் ஒளிபரப்பப்படும்.

**3. சிறப்பு அனுமதி.**

புனித வியாழன் திருமணி ஆராதனை, மற்றும் பாஸ்கா திருவிழிப்பு ஆகிய நிகழ்வுகளுக்கு நள்ளிரவு 12.00 மணி வரை ஆலயங்கள் திறந்திருக்கப்பட தேசிய ஒருமைப்பாடு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதர நாள்களில் திருப்பலிக்கென ஆலயங்கள் காலை 6.00 முதல் பிற்பகல் 2.00 மணி வரையிலும், மாலை 4.00 முதல் இரவு 10.00 வரை திறக்கப்படலாம்.




**4. ஆண்டு திருத்தைலத் திருப்பலி**

இவ்வாண்டுக்கான திருத்தைலத் திருப்பலி சுபாங் ஜெயாவிலுள்ள தோமஸ் மோர் பங்கில், 24-03-2021 அன்று மாலை 6.00 மணிக்குக் கொண்டாடப்படும். தளர்த்தப் பட்ட நடமாட்டக்கட்டுப்பாட்டின் நிபந்-தனைகளின்படி, அருள்பணியாளர்கள் அழைக்கப்பட்ட பிரமுகர்கள் மட்டுமே இத்திருப்பலியில் ஆலயத்தில் பங்குபெற அனுமதிக்கப்படுவர்.

இக்கொண்டாட்டத்தை கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் இயங்கலை நேரடி ஒளிபரப்பின் வாயிலாகக் காணலாம்.

அலுவலகச் செயலர்,
அருள்தந்தை மைக்கல்ர் சுவா.
11-03-2021

## ஞானமுள்ள மனிதர்கள், எல்லா இடங்களிலும் இருக்கின்றனர்

ஈராக்கின் ஷியா பிரிவின் சமயத் தலைவர் அயோத்தொலா அலி அல்-சிஸ்தானி அவர்கள் ஞானம், மற்றும், விவேகம் உள்ள மனிதர், ஞானமுள்ள மனிதர்கள், எல்லா இடங்களிலும் இருக்கின்றனர். ஏனெனில், கடவுளின் ஞானம், உலகெங்கும் பரவியிருக்கின்றது.

- திருத்தந்தை பிரான்சிஸ்- (08-03-2021)

# அழியா வாழ்வு பெறுவோம்!

தவக்காலத்தில் 4ம் ஞாயிறு, "அகமகிழும் ஞாயிறு". தவக்காலத்தில் அணியப்படும் ஊதா வண்ணம் இல்லாமல் இந்த 4-ம் வார தவக்கால ஞாயிற்றுக்கிழமையில் குருவானவர் இளம் சிவப்பு வண்ணத்தில் திருவுடை அணியக்கூடும். பாஸ்கா பெருவிழா நெருங்கி வருகிறது என்பதை இது குறிக்கிறது. நமது மீட்பு வருகிறது என்பதை நோக்கி நாம் அகமகிழ்ந்து கொண்டாடும் காலம் இது.

எகிப்து அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு வந்து சேர்ந்த இஸ்ராயேல் மக்கள் கடவுளுக்கு எதிராக பாவம் செய்தனர், எருசலேமும் சூறையாடப்பட்டதை இன்றைய முதல் வாசகம் குறிப்பிடுகிறது. மோசேவிற்கு எதிராக பேசி, கடவுளைக் குறைகூறிய மக்கள் பாம்பால் தீண்டப்பட்டு பலர் மாண்டனர் (எண்.21:6). பாவம் செய்த மக்கள் திருந்தி, மோசேயிடம் கெஞ்சவே,. கம்பத்தில் பொருத்தப்பட்ட வெண்-கலத்தால் செய்யப்பட்ட பாம்பைப் பார்த்த மக்கள் உயிர் பிழைத்தனர். இவ்வாறு இஸ்ரயேல் மக்களின் மீட்பு வரலாறு தவக்காலத்தில் மீள்பார்வை செய்யப் படுகிறது.

தவக்காலத்தின் முதல் வாரத்தின் முதல் வாசகம் நோவாவுடன் கடவுள் கொண்ட உடன்படிக்கை பற்றிப் பேசுகிறது. இரண்டாம் வாரத்தில் ஆபிரகாமுடன் செய்த கடவுள் கொண்ட உடன்படிக்கை பற்றிப் பேசப்படுகிறது. மூன்றாவது வாரத்தில் மோசேவிற்கு பத்துக் கட்டளை கொடுக்கப்பட்டதை வாசிக்கிறோம்.

இவ்வரிசையில், இவ்வாரம் மீண்டும் பாவத்தில் விழும் இஸ்ரேயேல் மக்கள் இரண்டாவது முறையாக நாடு கடத்தப்படுவதையும் எருசலேம் ஆலயம் அழிக்கப்படுவதையும் வாசிக்கிறோம். எத்தனை முறை பாவத்தில் இடறி விழுந்தாலும் கனிவும் இரக்கமும் மிகுந்த கடவுளின் அன்பு நம்மை மீட்டெடுக்கிறது என்பதை இந்த வரலாறு காட்டுகிறது. ஆயினும் அந்த இறை இரக்கத்திற்கும் அருளுக்கும் அன்புக்கும் முன்நிபந்தனை உண்டு. மீட்பு பெறுவதற்கு ஒருவர், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் (யோவா.3:18).

இதனால்தான் இறையருளால் நாம் அனைவரும் மீட்கப்பட்டிருக்கிறோம் என இன்றைய இரண்டாம் வாசகம் (எபே.2:4-10) வலியுறுத்துகிறது. ஆனால் இந்த மீட்பு செயல் மனித அருளால் அல்லது செயலால் கிடைக்கவில்லை என்பதை புனித பவுல் சுட்டிக்காட்டுகிறார். இதில் நாம் பெருமை பாராட்ட ஒன்றுமில்லை. கடவுளே நம்மீது இரக்கம் காட்டியுள்ளார். ஏனெனில் அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார் என்றும் அந்த அன்பின் மூலம் நம்பிக்கையோடு இருக்கும் நம்மை உயிர் பெறச் செய்வார் என்றும் திருத்தூதரான பவுல் கூறுகிறார் (எபே.2:5).

இன்றைய நற்செய்தியில் புனித யோவான். கடவுள் நம்மை எவ்வளவு அன்பு செய்கிறார் என்பதை விட எவ்வாறு அன்பு செய்கிறார் என்றால் நாம் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு தம் ஒரு மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் அன்பு கூர்ந்தார் என கூறுகிறார் (யோவா.3:16). நற்செய்தியில், இயேசு கிறிஸ்து கடவுளிடமிருந்து வந்தவர் என்பதை ஏற்றுக் கொண்டு, பின்பற்றுபவராக இருக்கும், யூத சமயத் தலைவர்களில் ஒருவரான நிக்கதேமின் அறியாமையைப் போக்கி, மீட்பின் உண்மையை விளக்குகிறார், இயேசு. பழைய ஏற்பாட்டை நன்கு அறிந்த நிக்கதேமிற்கு, மோசே பாலைநிலத்தில் வெண்கலப் பாம்பை உயர்த்திய நிகழ்ச்சியைச் சுட்டுகிறார். அவ்வாறு இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டு, சிலுவையில் தொங்கும் அவரைப் பார்க்கும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர் (யோவா3:16).

நற்செய்தியின் இரண்டாவது பகுதியில், நமது பாவத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் ஒளியாக ஆண்டவர் இருக்கிறார் என்பது தெளிவுப்படுத்தப்படுகிறது (யோவா.3:19). அம்பலமான நமது பாவத்தை விட்டு விட்டு ஒளி காட்டும் பாதையில் நடக்கப் போகிறோமா என்பதை முடிவு செய்யும் பொறுப்பு நம்மிடம் விடப்பட்டு விட்டது. மீட்பளிக்கும் ஒளியில் வாழ்ந்தால் உண்மையைக் கடைப் பிடிப்போம். இல்லையேல், நமக்குத் தண்டனைத் தீர்ப்புக் காத்திருக்கிறது என நற்செய்தி எச்சரிக்கிறது (யோவா.3:19). இந்த தவக்காலத்தில், பாவத்தின் வீரியத்தைக் குறைக்கும் தர்மச் செயல்களைச் செய்து பாவமன்னிப்பு பெறுவோம்; தந்தையோடு இணைவோம்.

*-அந்தோணி இன்னாசி, ஸ்ரீ கெம்பாங்கான்*

**தவக்காலம் 4-ம் வாரம்**
2 குறி: 36: 14-16, 19-23
திபா: 137: 1-2. 3. 4-5. 6
எபே : 2: 4-10
யோவான் : 3: 14-21
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் 4**